உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No.518 /2023

| | |
|---|---|
| பெயர் | :முனியசாமி(அ.சா.1) |
| தகப்பனார் பெயர் | :சண்முகம் |
| கணவர் பெயர் | : |
| வயது | :18 |
| கிராமம் | :K.புதூர் |
| வட்டம் | :மதுரை |
| தொழில் | :கட்டிடவேலை |

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

03.11.2025

முதல் விசாரணை:

ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. நான் ஆஜர் எதிரிகள் மீது புகார் கொடுத்துள்ளேனா என்றால் ஆமாம். எதற்காக புகார் கொடுத்துள்ளேன் என்றால் ஆஜர் எதிரிகள் இருவருமே என்னை வெட்டினார்கள். நான் ஒருநாள் இரவு தூங்கிகொண்டிருந்தேன். அப்போது இருட்டாக இருந்தது. மேற்படி சம்பவம் 2022ம் ஆண்டு நடந்தது. அம்மாச்சிவீடான இடையப்பட்டியில் இரவு உறங்கிகொண்டிருந்த போது, சத்தம் கேட்டது, வெளியே வந்தேன், எனக்கு ஒன்றும் தெரியவில்லை, யார் வெட்டினார்கள் என்று தெரியவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டது).

அ.த.கு.வி :

எனது தாயார் பெயர் சூசையம்மாள். என் தந்தை பெயர் சண்முகம், என் தந்தை இறந்துவிட்டார். சம்பவம் நடந்த போது என் தந்தை உயிருடன் இருந்தாரா என்றால் இருந்தார். என் அம்மாச்சி ஊரான இடையப்பட்டியில் இருந்த போது உரக்கம்பெனியில் வேலை செய்தேனா என்றால் வேலை செய்தேன். என் அம்மாச்சி வீடு தனியாகவும், எங்களுடைய வீடு

தனியாகவும் இடையப்பட்டியில் இருந்தது என்றால் சரிதான். என்னுடன் உரக்கம்பெனியில் மணி என்பவர் வேலை செய்தாரா என்றால் வேலை செய்தார். நான் என் போனில் இருந்து மணி என்பவருக்கு குறுந்தகவல் அனுப்பினேனா என்றால் ஆமாம். அது தவறுதலாக 1ம் எதிரி விஜய் உடைய கைப்பேசி எண்ணிற்கு சென்றுவிட்டதா என்றால் ஆமாம். விஜய் உடைய மனைவியின் கைப்பேசிக்கு தவறுதலாக மெசேஜ் போகவே அவர் என்னிடம் வந்து கேட்டாரா என்றால் கேட்டர்ரி நான் அவரிடம் மன்னிப்பு கேட்டுவிட்டேன். நடந்த சம்பவமானது 30.10.2022 அன்று நடந்ததா என்றால் தேதி, மாதம் நினைவில்லை. ஒருநாள் கழித்து மறுநாள் இரவு தான் சம்பவம் நடந்தது. சம்பவம் நடந்த போது என் அம்மாச்சி வீட்டில் இரவு உறங்கிகொண்டிருந்தேன். ஆஜர் எதிரிகள் அப்போது அரிவாள் மற்றும் கத்தியுடன் வந்து என்னை தலையிலும், காலிலும், கையிலும் வெட்டினார்களா என்றால் நான் இருட்டாக இருந்ததால் நான் பார்க்கவில்லை. எனது இடது கைவிரலில் வெட்டுபட்டு எனது இடதுகையை முழுவதுமாக நீட்ட இயலாமல் போனது. 1ம் எதிரி விஜய் தான் இடது கையிலும், தலையிலும் வெட்டினார் என்றால் சரியாக நினைவில்லை. 2ம் எதிரி வலது கையில் கத்தியால் என்னை குத்தினார் என்றால் சரியாக நினைவில்லை. அதன்பிறகு என்னை என் தந்தை தகவல் அறிந்து 108 ஆம்புலன்சில் ஏற்றி மருத்துவமனைக்கு அழைத்து சென்றார் என்றால் அக்கம்பக்கத்தில் இருப்பவர்கள் தான் என்னை அழைத்து சென்றார்கள். சாட்சியிடம் புகார் வாக்குமூலம் காட்டப்பட்டு அதில் உள்ள கையெழுத்து, மற்றும் கைரேகை அவருடையது தானா என்று கேட்கப்பட்டது. சாட்சி தனக்கு சுயநினைவில்லை என்றும் கைரேகை வைத்தது அவர் தானா என்று தெரியவில்லை என்று குறிப்பிடுகிறார். மேற்படி புகார் வாக்குமூலத்தில் அறிவேன் சாட்சியாக கையெழுத்திட்டுள்ளது எனது தந்தை எனறு ஒப்புகொள்ளவே மேற்படி கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் ஆஜர் எதிரிகள் மீது கடந்த 01.11.2022 அன்று

தன்னை வெட்ட முற்பட்டதாக கூறி புகார் வாக்குமூலத்தில் கையெழுத்து செய்து விட்டு தற்போது ஆஜர் எதிரிகளுடன் சமரசம் ஆகிவிட்டபடியால் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.11.03 22:31:27 +0530

Assistant Sessions Judge

Melur